# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

முன்பு சேரசோழபாண்டியர் தமிழ் நாட்டை ஆட்சி செய்தனர். அவர்களை விட பல குறுநில மன்னர்களும் தமிழ்நாட்டின் அரசர்களாக விளங்கினர். அவர்களுள் ஒருவர் பாரி. அவர் சிறந்த வீரர். உயிர்களிடத்தில் இரக்கம் உள்ளவர். பாரி பறம்பு நாட்டை ஆண்டார். அந்நாட்டில் முந்நூறு ஊர்களும் பறம்புமலையும் இருந்தன. பாரி முந்நூறு ஊர்களையும் ஏழை மக்களுக்குப் பரிசாக வழங்கினார். அக்காலத்தில் கபிலர் என்ற புலவர் புகழுடன் விளங்கினார். கபிலர் பாரியுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். ஒருநாள் பாரி காட்டு வழியால் சென்று கொண்டிருந்தபோது ஒரு முல்லைக்கொடி நிலத்தில் கிடந்தது. பாரி அதற்கு உதவ எண்ணினார். முல்லைக்கொடியைத் தேரில் படரவிட்டு அரண்மனைக்கு நடந்து சென்றார். இக்கொடைச் சிறப்பினால் பாரியின் புகழ் தமிழ்நாடு எங்கும் பரவியது.

1. பாரி எந்நாட்டை ஆண்டார்?

_______________________________________________

2. பாரி முந்நூறு ஊர்களையும் யாருக்குப் பரிசாக வழங்கினார்?

_______________________________________________

3. யார் பாரியுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்?

_______________________________________________

4. யாரின் புகழ் தமிழ்நாடு எங்கும் பரவியது?

_______________________________________________

5. நிலத்தில் கிடந்த கொடி எது?

_______________________________________________

புள்ளிகள் 10

25. தேசிகவிநாயகம்பிள்ளையினால் ஆங்கில நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட நூல்

அ ) ஆத்திசூடி ☐ ஆ ) நாலடியார் ☐
இ ) ஆசியசோதி ☐ ஈ ) தேம்பாவணி ☐

26. நாய் குரைக்கும். அது போல் குயில்

அ ) கூவும் ☐ ஆ ) பேசும் ☐
இ ) அகவும் ☐ ஈ ) கரையும் ☐

27. ஓடுகின்றது என்ற வினைச்சொல்லை இறந்தகாலமாக மாற்றினால்

அ ) ஓடும் ☐ ஆ ) ஓடினர் ☐
இ ) ஓடியது ☐ ஈ ) ஓடின ☐

28. யாழ்ப்பாண நகரின் முன்னைய பெயர்களில் ஒன்று

அ ) சம்புகோளம் ☐ ஆ ) கொழும்பு ☐
இ ) மட்டக்களப்பு ☐ ஈ ) வன்னி ☐

29. மின்குமிழைக் கண்டுபிடித்தவர்

அ) எடிசன் ☐ ஆ ) மார்க்கோனி ☐
இ ) கலிலியோ ☐ ஈ ) கிரகாம்பெல் ☐

30. பாடுவாள் என்பதன் இடைநிலை

அ ) ஆள் ☐ ஆ ) தேடு ☐
இ ) வ் ☐ ஈ ) ள்

புள்ளிகள் 30

19. வினைச்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) எழுதினான் ☐ ஆ ) நூல் ☐

இ ) புலவர் ☐ ஈ ) வளி ☐

20. தமிழ்மறை எனக் குறிப்பிடப்படும் நூல்

அ ) திருக்குறள் ☐ ஆ ) மூதுரை ☐

இ ) நல்வழி ☐ ஈ ) தொல்காப்பியம் ☐

21. இலங்கைக்கு முதன்முதலில் வந்த ஐரோப்பியர்

அ ) போர்த்துக்கேயர் ☐ ஆ ) ஆங்கிலேயர் ☐

இ ) ஒல்லாந்தர் ☐ ஈ ) சிங்களவர் ☐

22. ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் என்பன

அ ) வல்லினம் ☐ ஆ ) இடையினம் ☐

இ ) மெல்லினம் ☐ ஈ ) உயிரினம் ☐

23. குமண மன்னன் ஆண்ட மலைப்பகுதி

அ ) பறம்புமலை ☐ ஆ ) முதிரைமலை ☐

இ ) இமயமலை ☐ ஈ ) பொதிகைமலை ☐

24. படர்க்கை இடத்தைக் குறிக்கும் சொல்

அ ) கொடுக்கின்றாய் ☐ ஆ ) கொடுக்கின்றான் ☐

இ ) கொடுத்தோம் ☐ ஈ ) கொடுத்தேன் ☐

13. இயக்கரது ஆட்சி இருந்த இடம்

அ ) நாகதீபம் ☐ ஆ ) கல்யாணி ☐

இ ) நயினாதீவு ☐ ஈ ) மணிபல்லவம் ☐

14. குழந்தையை உறங்க வைப்பதற்காகப் பாடப்படும் பாடல்

அ ) மீனவர்பாடல் ☐ ஆ ) காதற்பாடல் ☐

இ ) தாலாட்டுப்பாடல் ☐ ஈ ) ஏர்ப்பாடல் ☐

15. யாழ்ப்பாண அரசுக்கு முன்னர் தமிழரசு நிலவிய இடம்

அ ) கந்தரோடை ☐ ஆ ) வன்னி ☐

இ ) முல்லைத்தீவு ☐ ஈ ) கொழும்பு ☐

16. அன்னை தெரேசா ஏழைகளுக்கு உதவினார். இதில் உதவினார் என்பது

அ ) எழுவாய் ☐ ஆ ) செயப்படுபொருள் ☐

இ ) அடைமொழி ☐ ஈ ) பயனிலை ☐

17. வயற்கரை என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) வயல் + கரை ☐ ஆ ) வயல்க் + கரை ☐

இ ) வயற் + கரை ☐ ஈ ) வயற்க் + கரை ☐

18. குணப்பெயர்

அ ) தமிழீழம் ☐ ஆ ) நாளை ☐

இ ) நூல் ☐ ஈ ) சிவப்பு ☐

7. நான் + ஐ என்பதைச் சேர்த்து எழுதினால்

அ ) என்னை    ஆ ) உன்னை

இ ) நீங்களை    ஈ ) உங்களை

8. கொக்கும் ஆமையும் ———— வாழ்ந்தன.

அ ) கடலில்    ஆ ) கிணற்றில்

இ ) குளத்தில்    ஈ ) ஆற்றில்

9. மன்னார்க்கடலில் முத்துக்குளிக்கும் முழு உரிமையையும் பெற்றிருந்த அரசு

அ ) யாழ்ப்பாண அரசு    ஆ ) கண்டி அரசு

இ ) கோட்டை அரசு    ஈ ) சிங்கள அரசு

10. உவகை என்பதன் பொருள்

அ ) வையகம்    ஆ ) கொடையாளி

இ ) மகிழ்ச்சி    ஈ ) வள்ளல்

11. தமிழ் இலக்கணம் கூறும் பால்வகை

அ ) ஐந்து    ஆ ) மூன்று

இ ) ஆறு    ஈ ) இரண்டு

12. இருள் என்பதன் எதிர்ச்சொல்

அ ) ஒலி    ஆ ) ஒளி

இ ) வரட்சி    ஈ ) குளிர்

1) **தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகள்

அ ) 247 ☐ ஆ ) 216 ☐

இ ) 217 ☐ ஈ ) 30 ☐

2. தரை என்பது

அ ) மலை ☐ ஆ ) வானம் ☐

இ ) நிலம் ☐ ஈ ) காற்று ☐

3. கணைக்கால் இரும்பொறையுடன் போர் புரிந்த மன்னன்

அ ) செங்கணான் ☐ ஆ ) செங்குட்டுவன் ☐

இ ) சேரலாதன் ☐ ஈ ) கரிகாலன் ☐

4. அஃறிணைக்குரிய பால்களில் ஒன்று

அ ) ஆண்பால் ☐ ஆ ) பலவின்பால் ☐

இ ) பெண்பால் ☐ ஈ ) பலர்பால் ☐

5. **பழமொழி:**

கண் பார்த்தால் ____________ செய்யும்.

அ ) கண் ☐ ஆ ) கை ☐

இ ) கால் ☐ ஈ ) முகம் ☐

6. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை பிறந்த இடம்

அ ) தஞ்சாவூர் ☐ ஆ ) பேரூர் ☐

இ ) நல்லூர் ☐ ஈ ) நாஞ்சில் ☐

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. "பட்டினி கிடந்து பசியால் மெலிந்து" என்ற பாடலைப் பாடியவர் யார்?

___

2. சுட்டாலும் வெண்மை தருவது எது என ஔவையார் மூதுரையில் குறிப்பிடுகின்றார்?

___

___

3. மாமன்னன் எல்லாளன் இலங்கையை எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?

___

4. நாட்டார் பாடல்களை வேறு எப்படி அழைப்பர்?

___

5. பாரிமகளிரின் பெயர்களைத் தருக.

___

6. ஊக்கம் என்றால் என்ன?

___

7. சிங்கள ஆட்சியாளரால் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளில் ஒன்றைத் தருக.

___

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி; கவிதையை முழுமையாக்குக.**

## ஆசிரியர்

| | | | | |
|---|---|---|---|---|
| வாழச் | நல்ல | அகவையில் | எழுத்தும் | சொன்னாரே |

அறிவை வளர்த்த ஆசானை
அன்னை என்று மதிப்பேனே
சிறிய ________________ அரிச்சுவடி
சீராய்ச் சொல்லி தந்தாரே

நல்வழி பலவும் சொன்னாரே
நலமாய் ________________ செய்தாரே
அல்வழி தன்னில் போகாமல்
அன்பு வழியைச் ________________

எண்ணும் ______________ கண்ணென்று
எடுத்துச் சொல்லித் தந்தாரே
மண்ணில் ________________ பண்புடனே
மகிழ்ந்து வாழச் செய்தாரே

புள்ளிகள் 10

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   அ ) காலப்பெயர் ____________________

   ஆ ) எதிர்காலம் ____________________

   இ ) பலவின்பால் ____________________

2. 1. உயிர் எழுத்துகள் எத்தனை? ____________

   2. அவற்றின் வகைகளைத் தருக.

   ________________________________________

   ________________________________________

3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இடம்பெறுமாறு ஒரு சொல்லியம் எழுதுக.

   ________________________________________

4. தரப்பட்டுள்ள சொற்களின் திணை, இடம் என்பவற்றைத் தருக.

| | திணை | இடம் |
|---|---|---|
| பாய்ந்தன | ____________ | ____________ |
| சிரிக்கிறாய் | ____________ | ____________ |
| அவன் | ____________ | ____________ |

5. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

   பால் + குடம் ____________________

   வானம் + வில் ____________________

   தமிழ் + ஏடு ____________________

புள்ளிகள் 15

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. நல்லனவற்றையே எப்பொழுதும் ______________ வேண்டும்.
( எண்ண, என்ன )

2. மாணவர்கள் ஆசிரியரிடம் ______________ நடத்தல் வேண்டும்.
( பணிவாக, பனிவாக )

3. இன்று எனக்கு ______________ விடுமுறை.
( பள்ளி, பல்லி )

4. ______________ பசுமையாகக் காட்சியளித்தன.
( மறங்கள், மரங்கள் )

5. தமிழர் ______________ சிறந்து விளங்கினர்.
( கலைகளில், களைகளில் )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- யாழ்ப்பாணத்தமிழரசு
- பாரிமகளிர்
- நீங்கள் கலந்துகொண்ட பிறந்தநாள் விழா
  - யாருடைய பிறந்தநாள் விழா
  - அங்கு நடைபெற்ற நிகழ்வுகள்
  - வழங்கிய உணவுகள்
  - விழா பற்றிய உமது கருத்து

புள்ளிகள் 20